# விளம்பரம்™

VLAMBARAM™

416-282-8059 416-282-4978

சமூக முன்னேற்றப்பத்திரிகை மாதமிருமுறை இலவசம்

நிதி: 12 FEBRUARY 01 2002 பாலம்: 03



வெளிவருகின்றது

ஏப்ரல் 13 முதல்

உலக தமிழோசை

ULAKA THAMILOSZAI

காலாண்டு சஞ்சிகை



எதிர்காலத்தில் இறந்தகால நிகழ்வைப் பார்க்கலாமா? (பக். - 9)

வாகனம் வாங்கும் போது, முற்பணம் கொடுப்பவர்களின் கவனத்திற்கு (பக்.-4)

காற்றுக்கென்னவேலி, நந்தா வரிசையில் அழகி (பக்.- 07)

பண்டைத் தமிழரின் திருமண முறை (பக்கம்-15)

வெளியிலிருந்து வீட்டில் நடைபெறுவதை கவனிக்க புதிய நுட்பம் (பக். - 2)

தலையிடியை சுகமாக்க குளிசை நல்லதா? (பக்கம் - 04)

48 வருடங்களில் உலக்கிண்ணத்தில் துருக்கி? (பக்கம் - 06)

ஜனவரி 2002இல் வீட்டின் விலையில் எதிர்பாராத அதிகரிப்பு (பக். - 17)

வோட்டலூ பல்கலைக்கழகத்தில் கணிதப் பரீட்சை ... (பக்கம்-10)


## உன்னை அறிந்தால்

..னித குலத்தின் அடிப்படைத் தேடலாக உள்ளது - அறிதல். அறிதல் என்றால் என்ன? விஞ்ஞான .லகமும் மெஞ்ஞான உலகமும் அறிதற்கு வெவ்வேறாக விளக்கம் கொடுக்கின்றன. பல விஞ்ஞானக் ண்டுபிடிப்புகளை விஞ்ஞான அறிதற்குத் தெரியப்படுத்துகிறது. உ.தாரணமாக ஐன்ஸ்ரைனின் சக்திக் கோட்பாடு ($E=Mc^2$) எந்தப் பொருளும் ஒளியின் வேகத்தை அடையும் போது சக்தி உருவம் பெறுகின்றது எனக் கூறுகின்றது. இவ்வாறே, நாம் அறியும் புற உலகுபற்றிய பொதுவாக அங்கீகரிக்கப்பட்ட விதிகளை எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட முறையில் உருவாக்கியவர் சேர். ஐசாக் நியூட்டன். நியூட்டன், ஐன்ஸ்ரைன் மற்றைய விஞ்ஞானிகளின் கண்டுபிடிப்புக்கள் ஒருவகை அறிதலே ஆகும். இருந்த விடயங்களை தங்கள் விஞ்ஞான அறிவால் கண்டுபிடித்தலே அவர்களின் அறிதல். மெஞ்ஞானிகள் எமது இயக்கத்திற்கு அப்பாற்பட்ட கண்டுபிடிப்புகளைச் செய்துள்ளார்கள். அறிதற்கு வெளியே என்னதான் இருந்தாலும் அவற்றின் இருப்பு அறிதலினூடாகவே உருவாகின்றது. இருப்பும் அறிதலும் வேறல்ல. ஐன்ஸ்ரைன் தனது உரையில்... "பிரஞ்சம் பேரியக்கம் சார்ந்து உருவாக்கப்படும் கண்டுபிடிப்பு யாவும் மனிதமனத்தின் கற்பனைக்கு உட்பட்டதே". மெஞ்ஞானிகளின் தத்துவங்களும் அவர்களின் கண்டுபிடிப்பே: பொருட்கள் அனைத்தும் காரண காரிய உறவுக்குக் கட்டுப்பட்டவை என ஆதி சிந்தனையாளர் அறிந்தனர். இவர்களின் தத்துவப்படி. ஒருபொருள் ஒன்றிலிருந்து பிறக்கின்றது. அது ஒன்றாக மாறுகின்றது.

அறிதல் எம்மைப் பொறுத்ததே. நாமே பொறுப்பாளி. எந்த விடயங்களையும் நுண்ணியதாக அறியும் போதே அதன் பூரணத்துவத்தை அறியக் கூடியதாக இருக்கின்றது. எனவே ஒரு விடயத்தின் பூரணத்தை அறிய அத்துடன் சம்பந்தப்பட்ட சகல விடயங்களையும் அறிந்து. அதனூடாக தர்க்கமாக முடிவு பெறுதலே அறிதல் ஆகும்.

**நல்லதையே சிந்திப்போம். நல்லதையே செய்வோம். நாளை நமதே!**

-நெற்றிக்கண்ணன்




RE/MAX

Crossroads Realty Inc.

வீடு விற்க வாங்க பூரண ஆலோசனை பெற நாடவேண்டியவர்

Raja M. Mahendran, P.Eng.

Sales Representative

MEMBER OF RE/MAX HALL OF FAME

Office: (416) 491-4002

Pager (416) 589-4270

MEMBER OF RE/MAX PLATINUM CLUB


## அருள் விருந்து

-செ. சிவசுப்பிரமணியம்

- எல்லாவற்றிலும் வேகமானது எது? எண்ணமா? எண்ணும் பொழுதே அது அண்டங்களை எல்லாம் கடந்து செல்லுகிறது.
- ஆதிக்கம் படைத்தது போன்று புறவுலகம் தென்படுகிறது. ஆனால் [illegible] பொம்மை போன்று ஆட்ட வல்லது.
- எளிய உணவை உண்பது குற்றமாகாது. எளிய எண்ணத்தை எண்ணுவது பெருங்குற்றமாகும்.


Singapore Communication

❖Limited time offer* ❖Reliable & Friendly Service

Only $30.00/M + Taxes

❖ 250 Min. (Free Day Time)

❖ Mon-Thu 7PM - 7 AM இலவசம் ❖ Fri 7PM-Mon 7AM இலவசம்

❖ C/W, W/M, C/F, +C/I இலவசம்

* 6PM-8AM (MON.-FRI) & WEEKENDS) ALSO AVAILABLE

More Info: Pl..Call: Sathi / Raj

Office:416 745-2378/416 740-5292 Hot Line 416 866-9700

5010 Steeles Ave.., W., Unit 17ABC

Kipling & Steeles - Deliver Arranged*




சிவாகம கிரியா பீடம்

☎: (416) 724-7480

திருமணம், பதிவுத்திருமணம், பூப்பு நீராட்டு விழா, புண்யாக வாசனம், வீடு குடி புகுதல், திருமணம் விஷேச தனபாக்கிய பூஜை, கடை திறப்பு, லக்சுமி பூஜை, சிரார்த்த மஹாளயாதி பிதிர் பூஜை மற்றும் ஜோதிஷம் பார்த்தல், ஜனன ஜாதகம் எழுதுதல், விவாகப் பொருத்தம் பார்த்தல், மஹாகணபதி ஹோமம், ஆயுஷ்ய ஹோமம், தாரதோஷ மாங்கல்ய தோஷ நிவர்த்தி ஹோமம் மற்றும் முத்து மணவறை, தலைஅலங்கார ஜோடனை, ஜடை நாகம், ஆண்டாள் மாலை, தலைப்பாகை, பரத நாட்டிய அலங்கார ஆபரணங்கள் மற்றும் கல்யாண மண்டபம் போன்ற உங்கள் தேவைகளுக்கு அணுகுங்கள். **சிவஸ்ரீ ச. கு. ஸ்ரீதரக்குருக்கள்** (கண்ணன் குருக்கள்) திருமணப் பதிவாளர் / நிர்வாகி சிவாகம கிரியா பீடம்

5 Greenleaf Terr., Scarborough, Ont.

துரித பணமாற்றுச் சேவை



வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு

மு. காசிப்பிள்ளை & சன்ஸ்

☎ (416) 267-8221

Insurance & Financial Services

Balan Kanapathi (Agent)



- Auto
- Home
- R.R.S.P
- Life
- Disability
- Mutual Fund
- Group Insurance
- Child Education
- Travel ☞ Business

London Life

LIBERTY MUTUAL.

✆ 416 321-1515 / 905 294 2429 / 416 452 6975

4433 SHEPPARD AVE. E. SUIT 200, (BRIMLEY/SHEPPARD) SCARBOROUGH



VLAMBARAM, P.O. BOX 37527, 31 TAPSCOTT RD.
TORONTO, ONT. M1B 5P9, CANADA

TEL: (416) 282-8059
FAX: (416) 282-4978
e-mail: vlambaram@email.com

# அறிவும் ஆக்கமும் (98)



-விஜே குலத்துங்கம்

சிலர் வேலைக்கும் போகும் வழியிலோ. அல்லது வேலை யிடத்தில் இருந்துகொண்டோ. வீட்டை விட்டுக் கிளம்பும் போது வீட்டுக் கதவுகளை சரியாக பூட்டினோமா. சமையலறையில் அடுப்பை நிற்பாட்டினோமா விளக்குகளை அணைத்தோமா என்றெல்லாம் நினைத்துக் கொள்வார்கள். சிலருக்கு வேலையில் இருந்துகொண்டு வீடு ஒழுங்காக இருக்கின்றதோ. யாராவது வீட்டை உடைத்து உள்ளேப் போய் பொருட்களை களவாடிச் சென்றார்களா என்ற எண்ணமெல்லாம் தோன்றும். இப்படியெல்லாம் பலவற்றையும் யோசனை செய்யும் போது. வேலைப் பளுவிற்கு மேலாக மனப் பழுவும் அதிகரித்து. அவர்களுக்கு மன அழுத்தத்தைக் கொடுக்கின்றன. இதனால் நாளடைவில் அவர்கள் நோய்வாய்ப்படுகின்றார்கள்.

இவற்றையெல்லாம் தவிர்க்க இப்போது நவீன விஞ்ஞான தொழில் நுட்பம் கைகொடுத்துள்ளது. General Motors, Invensys Panasonic, Hewlett Packard, ADT SECURITIES SERVICES ஆகிய நிறுவனங்கள் ஒன்றாக சேர்ந்து INTERNST HOME ALLIANCE என்ற நிறுவனம் ஒன்றை நிறுவியுள்ளார்கள். இந்த நிறுவனத்தின் தலைவரான Tony Baira என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது. இதில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் தனியே செய்ய முடியாத விடயத்தை. பல நிறுவனம் ஒன்றை நிறுவியுள்ளார்கள். இந்த நிறுவனத்தின் தலைவரான Tony Barra என்பவர் கருத்துத் தெரிவிக்கும் போது. இதில் அங்கம் வகிக்கும் நிறுவனங்கள் தனியே செய்ய முடியாத விடயத்தை. பல நிறுவனங்களின் தொழில் நுட்பங்கள் ஒன்று சேர்ந்து ஒரு புதிய தொழில் நுட்பத்தை அமைத்துள்ளார்கள். இந்தப் புதிய தொழில்நுட்பத்தை On Star at Home என்று அழைக்கின்றார்கள். இந்த புதிய தொழில்நுட்பத்தை அமெரிக்காவிலுள்ள Detroit நகரிலுள்ள 100 வீடுகளில் இந்த மாதத்தில் இருந்து 4 மாதங்களுக்கு பரிசோதிக்கவிருக்கின்றார்கள். இந்த வீடுகளில் உள்ள பாவனையாளர்கள் எவ்வாறு இந்த தொழில் நுட்பத்தை கையாளுகின்றார்கள். அதில் ஏற்படும் கஷ்டங்கள் என்ன. எவ்வளவு தூரம் மக்கள் இதை விரும்புகின்றார்கள் என்பதை கண்டறிந்து இந்த தொழில் நுட்பத்தை திருத்தியமைக்கவிருக்கின்றார்கள். இந்த புதிய தொழில்நுட்பத்தில் வீட்டில் ஒரு மின்கணணி தொடர்ந்து இயங்கிக் கொண்டிருக்கும். வீட்டிலுள்ள பல இலத்திரனியல் சாதனங்கள் இந்த மின்கணணியுடன் இணைக்கப்பட்டிருக்கும். இவை வெளியிடத்துடன் மின் இணையம் - Internet மூலம் இணைக்கப்பட்டிருக்கும். மின் இணையத்தில் ஒவ்வொரு வீட்டுச் சொந்தக்காரருக்கென ஒரு இணையத்தளம் அல்லது web page அமைக்கப்பட்டிருக்கும். இந்த இணையத்தளத்திற்கு அல்லது இணையப் பக்கத்திற்கு அவர் மாத்திரம் ஒரு இரகசிய password மூலம் உட்செல்ல முடியும். இந்த இணையப் பக்கத்தில் வீட்டிலுள்ள எல்லா விடயங்களையும் பார்க்க முடியும். எவ்வளவு வீடியோ [illegible]மராக்களை பொருத்துகின்றார்கள் என்பதைப் பொறுத்து. வீட்டிலுள்ள பல இடங்களையும் பார்வையிடலாம் அதைவிட வீட்டிலுள்ள அடுப்பு. மின்விளக்குகள் உட்பட பல இலத்திரனியல் உபகரணங்களையும் இந்த இணையப் பக்கத்தினூடாக கட்டுப்படுத்த முடியும். வீட்டிற்கு வெளியே எந்த இடத்தில் இருந்தும், internet வசதியிருந்தால் இணையப் பக்கம் மூலம் இதைச் செய்து கொள்ளலாம்.

இதைவிட கைத்தொலை பேசியூடாகவும் வீட்டிலுள்ள மின்கண்ணியுடன் தொடர்பு கொண்டு வேண்டிய மாற்றங்களைச் செய்யலாம். அத்துடன் இப்போது பரிசோதிக்கப்படும் 100 வீடுகளின் சொந்தக்காரர்களின் கார்களிலும் விசேட கருவிகளை பொருத்தியுள்ளார்கள். இந்தக் கருவிகள் மூலம் வீட்டினைத் தொடர்பு கொள்ளலாம். கார்களில் உள்ள இந்த கருவிகள் Voice Recognition Technology என்ற தொழில்நுட்பதினால் இயங்குகின்றது. இது உங்கள் குரலை அடையாளம் கண்டு. உங்கள் குரலால் இடும் கட்டளைகளை ஏற்றுக்கொண்டு. அந்தக் கட்டளைகளை வீட்டிலுள்ள மின்கணணிக்கு அனுப்பி, வீட்டில் தேவையான விடயங்களை செய்விக்கின்றது.

வீட்டின் கதவுகள் 'Smart Door' எனப்படும். விசேட தொழில்நுட்பம் அமைந்த ஒரு தொகுதியாக இருக்கும். வீட்டின் கதவை யாராவது தட்டினால். அல்லது வாசற்கதவு மணியை யாராவது அடித்தால். கதவு அந்த தகவலை மின்கணணிக்கு அனுப்பும். மின்கணணி உடனே அதை உங்கள் தொலைபேசிக்கு அழைத்துச் சொல்லும். ஒரு மின் அஞ்சலை அனுப்பும். அல்லது Test Message அதாவது எழுத்து மூலமான அறிவித்தலை உங்கள் இணையத் தளத்திற்கு அனுப்பும். கதவின் முன்னால் உள்ளவரைக் கூட இணையத் தளத்தில் பார்க்க முடியும். சில வேளைகளில் உங்களுக்கு தெரிந்த விருந்தாளிகள் திடீரென்று வீட்டிற்கு வர முடியும். இந்த இணையத் தளத்தின் தளத்தின் மூலமாக நீங்கள் வீட்டின் கதவை எங்கிருந்தும் கூட திறந்துவிட முடியும். இதைப் போலவே திருடர்கள் வீட்டின் கதவை உடைத்தால் கூட. உடனடியாக உங்களுக்கு அறியத் தரும். அதுமாத்திரமல்ல வீட்டினுள்ளே நுழைபவர்களின் முகத்தைக் கூட இணையப் பக்கத்தின் மூலமாகப் பார்க்கலாம்.

வீட்டின் மின்கணணியுடன் உங்கள் வீட்டின் வெப்பமேற்றும் கருவி. எயார் கண்டிஷன் - குளிரூட்டும் கருவி. மற்றும் கோப்பி தயாரிக்கும் இயந்திரங்கள் ஆகியவற்றையும் இணைத்துக் கொள்ளலாம். வீட்டில் ஒருவரும் இல்லாமல் எல்லோரும் வெளியே செல்லும் போது வெப்பமேற்றி - Heater ஐ குறைத்துவிடலாம். நீங்கள் வீட்டிற்கு வருவதற்கு சற்று முன்பாகவோ தொலைபேசி மூலம் அழைத்தோ, இணையப்பக்கத்தினூடாகவோ உங்கள் வெப்பமேற[illegible]ய வெப்பத்தை அதிகரிக்கச் செய்யலாம். கோப்பி தயாரிக்கும் இயந்திரத்தைக் கூட இயக்கிவிடலாம். நீங்கள் வீட்டை வந்தடையவும் கோப்பி பருகுவதற்கு தயாராகவிருக்கும். நவீன குளிர் சாதனப் பெட்டிகளும் அதன் உள்ளமைப்பில் குறிப்பிட்ட சில பொருட்களை குறிப்பிட்ட இடத்தில் வைக்கக் கூடியதாகவும் இருக்கும். உதாரணமாக பால், முட்டை, Juice போன்றவை அவற்றிக்கென அமைக்கப்பட்ட இடத்தில் வைக்கப்படும். இந்த இடங்களில் Sensor களும் மற்றும் Barcode ஐ வாசித்தறியக் கூடிய. கருவிகளும் இருக்கும். நீங்கள் இணையப் பக்கத்தினூடாக குளிர்சாதனப் பெட்டியினுள் எத்தனை முட்டை இருக்கின்றது. எவ்வளவு பால் இருக்கின்றது. எவ்வளவு குளிர்பானம் இருக்கின்றது போன்றவற்றை அறிந்து கொள்ளலாம். எனவே நீங்கள்[illegible] திரும்பும் போது வேண்டிய பொருட்களை வாங்கிக் கொண்டு செல்லலாம்.

இப்படி பலவிதமான வீட்டின் மின்சார இலத்திரனியல் உபகரணங்கள் மின்கணணியுடன் இணைக்கப்பட்டு உலகத்தில் எந்த இடத்தில் இருந்தும் இந்த உபகரணங்களை இன்ரநெற் ஊடாக நீங்கள் கட்டுப்படுத்த அல்லது இயக்க முடியும்.

******************************************************

"அறிவும் ஆக்கம்" பற்றிய உங்கள் கருத்துக்களை நீங்கள் எந்த வகையான விடயங்களை இக்கட்டுரையில் எதிர்பார்க்கின்றீர்கள் என்பதை விஜே குலத்துங்கம் -
361 Highglen Ave. Markham, Ontario, L3S 3M2 என்ற விலாசத்திற்கு அல்லது
wijeyaku@hotmail.com என்ற முகவரிக்கு e-mail ஐ எழுதி அனுப்பவும்.

நூற்றுக்கணக்கான டொலர்கள் பெறுமதியான செயற்கை மருந்துகளுக்கு இலக்காகி மேலும் உங்கள் அழகிய முடியை இழந்துவிட்டீர்களா?

கவலையை விடுங்கள்
கனடிய சுகாதார அமைச்சின் அங்கீகாரம் பெற்று இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பெற்ற

Vitaplex
சம்போ அன்ட் கன்டிஷனர்
உங்கள் மனக்கவலையை நிவர்த்தி செய்கின்றது.
Vitaplex Shampoo $9.99
Vitaplex Conditioner $9.99
Vitaplex Shampoo Plus Conditioner $18.99
Applicable Taxes Extra
கிடைக்கும் இடங்கள்
ரொரன்ரோ, ஸ்காபரோ, மிஸ்சிஸ்சாகா, எதோபிக்கோ மற்றும் மொன்றியலில் அநேக தமிழ் வர்த்தக நிலையங்களிலும் கிடைக்கின்றது.

தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர்
* வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றி தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும்
* உரிய இழப்பீடுகள்
* மற்றைய இழப்பீடுகள்
* விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள்

Accident & Traffic Ticket
(14 Years Insurance Claims Experience)
Tel: (416) 245-6555
2095 Weston Road
Suite 203, Toronto, Ont.
Tel: (416) 755-2801
2390 Eglinton Ave., E.
Suite 223, Scar., Ont.

# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த, பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

SPECIAL

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

PRUDENTIAL DR.
MIDLAND AVE.
LAWRENCE AVE
N

Tel: (416) 285-4998

2500 Lawrence Ave. East, Unit #11, Scarborough, ON

Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple Apple


# கீதங்களுள் தமிழர் கீதம் நூல் வெளியீட்டுவிழா

மேற்படி விழா சென்ற சனிக்கிழமை (2- 2 - 2002) பி.ப. 4:30 மணியளவில் ஸ்காபரோ நகரசபை மண்டபத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

[illegible] விழாவுக்கு முனைவர் [illegible]லசுந்தரம் அவர்கள் தலைமை தாங்கினார். உலகத்தமிழர் படைப்பாளிகள் கழகம், தலைவர் திரு. தங்கவேலுவும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்தனர். உலகத்தமிழர் கீதத்தினை சிறுவர்கள் இசைத்ததைத் தொடர்ந்து விழா ஆரம்பித்தது. விழாவின் ஆரம்பத்தில் சைவ, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதப் பெரியார்கள் ஆசியுரை வழங்கினர். இது ஒரு புதிய, வரவேற்கத்தக்க நடைமுறை எனப் பார்வையாளர்கள் பேசிக் கொண்டனர். அடுத்து கவிஞர் கந்தவனம். திரு. சிற்றம்பலம், சிவலிங்கம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர். ஆசிரியர் சத்தியமூர்த்தி சிறப்புரை வழங்கினார். இவர் நூலின் பல பகுதிகளை மேற்கோள் காட்டி ஆசிரியரின் முயற்சியைப் பாராட்டிப் பேசினார். முன்னாள் பயிற்சிக் [illegible]சாலை விரிவுரையாளர் [illegible]லக்சாந்தர். நூலாசிரியர் உதயகரனுக்கு ஒரு பாராட்டுப் பத்திரம் வாசித்து. வழங்கினார். பல்வேறு நிறுவனங்களைச் சார்ந்த பிரமுகர்கள் பலர் இவ்விழாவில் கலந்து கொண்டு வாழ்த்துரைகள் வழங்கினர்.

இவ்விழாவினை ஒழுங்கு செய்த உலகத்தமிழ்ப் பண்பாட்டுக்கழகத் தலைவர் ஆ. வேலுப்பிள்ளை அண்மையில் தென்னாபிரிக்காவில் நடைபெற்ற பண்பாட்டு மாநாட்டில் உதயகரனின் கீதம் இசைக்கப்பட்டு. புதிய கொடியும் கோலாகலமாக ஏற்றவைக்கப்பட்ட நிகழ்வைப் பற்றி எடுத்துக் கூறினார். இக்கீதம் எல்லோராலும் வரவேற்றுப் பாராட்டப்பட்டதையும் தனது பேச்சின் போது தெரிவித்தார். இடைவேளையின் பின்னர் கீதத்தின் ஒளிப்படம் திரையில் காண்பிக்கப்பட்டது.


இதன் பின்னர் நூல் வெளியிட்டு வைக்கப்பட்டது. பார்வையாளர் யாவரும் நூலினை வாங்கி ஆதரவு வழங்கினர். பிரதம விருந்தினர் தமது உரையில் எமது மக்களிடையே வாசிப்புப் பழக்கம் குறைவு என்பதைச் சுட்டிக் காட்டினார். இதனால் மக்களிடம் நூல்கள் வாங்கும் பழக்கம் குறைவாகவே உளது. பெரும் பணச் செலவில் நூல்களை வெளியிடும் கலைஞர்கள் செலவழித்த பணத்தைத் திரும்பிப் பெறுவது சிரமமானது என்றும் கூறினார்.

நூலாசிரியரின் பல்வேறு பணிகள் பற்றியும் அவரது கவிதைகளின் சிறப்புப் பற்றியும் சாமி அப்பாத்துரை எடுத்துக் கூறினார். வளர்ந்து வரும் இளங்கலைஞரை வளர்த்து வாழ்த்தி ஊக்குவிப்பது எமது சமூகத்தின் பொறுப்பு எனக் கூறினார். தலைவர் தமது உரையில். எமது இனத்திற்காக ஒரு கீதம் இல்லாத குறையை உதயகரன் நீக்கியுள்ளார் எனவும் இக்கீதம் பட்டி தொட்டிகளில் எல்லாம் இசைக்கப்பட வேண்டியதன் சிறந்த எதிர் காலமுள்ளது என்பதை உணர்ந்தேன்" என்று தனது உரையில் குறிப்பிட்டார். கீதவாணி வானொலி அதிபர் நடா இராஜ்குமாரும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டு வாழ்த்துரை



முக்கியத்துவத்தையும் எடுத்துக் கூறினார்.

வாழ்த்துரை வழங்கிய சட்டத்தரணி யேசுதாசன். ரொறன்ரோவில் இடம்பெற்ற உலகத் தமிழ்ப் பண்பாட்டு மாநாட்டில் உதயகரன் கலந்து கொண்டு வாசித்த கவிதையின் சிறப்பினை "இவருக்குச் வழங்கினார். தென்னாபிரிக்க மாநாட்டில் தனக்கு ஏற்பட்ட அனுபவத்தைப் பார்வையாளருடன் கலந்து கொண்டார். ஆய்வுரை வழங்கிய திருமதி இராஜ்மீரா இராசையா நூலின் பல பகுதிகளை உதாரணங்காட்டி விளக்கினார். அடுத்து ஆய்வுரை வழங்கிய சின்னையா சிவநேசன் நூலின் தோற்றம். அச்சுப்பதிவு ஆய்வு பற்றி எடுத்துக் கூறினார். தேசியகீதங்களின் வரலாற்று நூல் இதுவரை வேறெந்த மொழியிலும் வந்ததாக வரலாறு இல்லை எனவும் இது நூலாசிரியரின் சிறப்பான பணி எனவும் பாராட்டிப் பேசினார். ரொறன்ரோ பெரும்பாக நூல்நிலைய ஆய்வின்படி பாவிப்போரில் 87% சதவீதமான தமிழ் மக்கள் விடீயோப் பிரதிகளை இரவல் வாங்குகின்றார்கள் எனவும் நூல் இரவல் பெறுவது 62% எனவும் புள்ளிவிபரங்களை எடுத்துக் கூறினார். மொத்தத்தில் ஒரு புதுமையான ஆனால் சற்று நீண்ட ஒரு வெளியீட்டு விழா அன்று நடை-பெற்றது.



**தொகுப்பு: சின்னையா சிவநேசன்**



# புதிய வகுப்புகள் (G11, G13)

**FEBRUARY 17, 2002 முதல் நடைபெறுகிறது**

**STARTING FOR 2ND SEMESTER - 2002**



**பிரதானமாக; பின்வரும் OAC பாடங்களான**

⇒ *Algebra* OAC
⇒ *Calculus* OAC
⇒ *Finite* OAC
⇒ *Physics* OAC

பெப்ரவரி மாதத்தில் ஆரம்பித்து, பாடசாலை வேகத்திற்கும் முன்னதாக அனைத்து அலகுகளும் (All Chapters) முடிவடைகிறது.

இதில் **Weekly Quices**
**By Weekly Test**
**Mid Term Exam**
**Final Exam** என்பன அடங்குகிறது.

பல்கலைக்கழகத்தின் முதல் வருடத்திற்கான பகுதிகளும் இதில் சேர்க்கப்படும். இவற்றுடன் **Grade 11** கணிதமும் ஆரம்பம்.

**Pl. Call: Mr. Sharma ☎: (416) 724-8336**
**Engineering Faculty, Waterloo University**


## *Dealer* இடம் உள்ள உங்கள் *Deposit*

எம் மக்களுக்கு இந்தக் கட்டுரை மிக உதவியாக இருக்கும் என்று நம்புகிறேன். எனது ஐந்து வருட *Honda Sales* அனுபவத்தைக் கொண்டு இதை உங்களுக்குத் தருகிறேன். இந்தக் கட்டுரை, கடினமாக உழைத்த எம் மக்களின் பணம் யாரிடமோ போகின்றதே என்பதைக் கருத்தில் கொண்டு வரையப்பட்டது.

எம்மவரில் பலர் எம்மவரை நம்புவதேயில்லை. சீனர்களையும் இந்தியர்களையும் மாற்றான்களையும் முழுமையாக நம்பும் இவர்கள் தமிழர்கள் என்றால், ஏதோ தீண்டத் தகாதவர்களாகவும் ஏமாற்றுக் காரர்களாகவும் நினைக்கின்றனர். அதற்கு ஒரு காரணமும் உண்டு. ஆயிரத்தில் ஒரு தமிழன் செய்த பிழையை எடுத்துக் கொண்டு எல்லோரும் அதேபோல் எல்லோரையும் நினைப்பது மிகமிக தவறாகும். அதன் விளைவு வீடு வாங்குவதனாலும் சரி, வாகனங்களை வாங்குவதனாலும் சரி, எது வாங்குவதனாலும் சரி மற்றைய இனத்தவர் மூலம் செய்து கொள்வது. தமிழரைப் புறக்கணிப்பது. இதில் கேலிக் கூத்தான விடயம் என்னவெனில், தங்களுக்கு ஏதும் உதவி தேவை என்றால் தமிழன் தான் உதவி புரிந்தாக வேண்டும். அத்தோடு தமிழர் சார்பான நிறுவனங்களுக்கு நிதி சேகரிப்பதற்கு எந்தத் தமிழை ஓரம் கட்டினார்களோ அந்தத் தமிழர்கள் தான் நிதி உதவியும் செய்தாக வேண்டும். இந்த நிகழ்ச்சி ஏனென்றால் நூறு அல்ல ஏராளமாக ஒவ்வொரு நாளும் நடந்து கொண்டுதான் இருக்கிறது. உங்கள் கண்களை மூடிக் கொண்டு யாரையும் நான் தமிழன் என்பதற்காக நம்பச் சொல்லவில்லை. உதாரணத்திற்கு ஒரு புதிய வாகனத்தை வாங்கப் போகின்றீர்கள் என்று வைத்துக் கொள்வோம் என்றால், முதலில் நம்மவரிடம் போகமுதல் வேறு ஒரு இடத்தில் விலையை விசாரியுங்கள். பின்னர் நம்மவரிடம் சென்று அதைவிட நல்லவிலையை பெற்று அவரிடம் வாங்குங்கள். அதை விடுத்து விட்டு முதலில் நம்மவரிடம் சென்று அவரின் நேரத்தை வீணாக்கி விட்டு பின்னர் வேறு இடத்தில் போய் வாங்காதீர்கள். தமிழனாக இருப்பதோடு மட்டும் இல்லாது தமிழன் என்ற உணர்வையும் வழங்குங்கள். இன்றிலிருந்து இதை வாசிப்பவர்கள் எதற்க்கும் நம்மவர் மூலம் செய்யுங்கள். உங்களுக்கும் நல்லம். நம்மவர்களுக்கும் நல்லம். நமக்காக உருவாகும் நாட்டுக்கும் நல்லம்.

எந்த ஒரு *Dealer* உம் உங்கள் பணத்தை வைத்திருக்க முடியாது. நீங்கள் வாகனத்தை வாங்கி ஏதோ ஒரு காரணத்திற்காக அதை *Cancel* செய்யும் போது எந்தச் சட்டமும் உங்கள் பக்கம் இருக்குமே தவிர *Dealer* பக்கம் இல்லை. இதுவரை இவ்வாறு பணத்தைத் தொலைத்தவர்கள் *Small Claim Court* க்கு செல்வது மூலம் உங்கள் பணத்தைப் பெறமுடியும்.

**சோதீஸ்: 704- 1179**


**NEW Technology**
**Security and Sound Inc.**

Sale and Repair

**FEBRUARY SALE**




**Start up $79.99 & up**


**Pioneer DEH-P3300 CD Player Blowout** Sale $254.99



**Alarm & Remote Starter Combo**
Start up $189.99 & up

**Alarm** Start up $89.99 & up

**Blaupunkt CD Player** Sale $174.99



**Mobil Video DVD Much more...**

www.newtechno.net
Tel: 416-335-4070
Shanger Cell (416) 451-4517
We also do any electrical work.
Fax: 416-335-9936
3501 McNicoll Ave., Unit 9, Scarborough, Ont. M1V 2N3

# கனடிய பொருளாதாரம்

## கணக்கியல் பொருளியல்

### 2001ஆம் ஆண்டிற்கான வருமான வரிப்பத்திரங்களைப் பூர்த்தி செய்தல்

(தொடர்ச்சி)



கடந்த இதழில் குறிப்பிட்டவாறு அதன் தொடர்ச்சியாக இவ் இதழிலும் உங்களது ஓய்வூதியக் காப்புறுதித் திட்டம் (*Retirement Savings Plan-RSP or Registered R[illegible]ement Savings Plan -RRSP*) பற்றி ஆராய்வோம்.

2001ஆம் ஆண்டிற்கான வருமானத்தில் இருந்து கழிக்கக் கூடிய *RRSP* ஐப் பெற்றுக் கொள்ளும் இறுதிநாள் மார்ச் மாதம் 1ஆம் திகதியாகும் (*March 1st*). எனவே இத்தருணத்தில் *RRSP* பற்றி பலருக்கும் பல கேள்விகள் இருக்கக் கூடும் என்று கருதி அவற்றுக்கான விடயங்களை இவ் இதழில் தருவது சாலச்சிறந்தது.

*RRSP* ஆனது. கனேடிய மக்களைப் பொறுத்த வரையில் அவர்களது நிதித் திட்டமிடலில் ஒரு மிகவும் முக்கியமான ஒன்றாக இருக்கின்றது. முந்திய இதழ்களில் குறிப்பிட்டு இருந்தவாறு. கனடாவில் நாம் செலுத்தும் வருமான வரி மற்றைய நாடுகளுடன் ஒப்பிடும் போது பொதுவாக அதிகமானதாக இருக்கின்றது. அதே நேரத்தில் கனேடிய அரசாங்கத்தின் ஓய்வூதியத் திட்டமும் (*CPP*) எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும் என்ற ஒரு ஐயப்பாடும் பொதுவாக இருக்கின்றது. எனவே *RRSP* ஆனது நீங்கள் செலுத்தும் வருமான வரியைக் குறைப்பதற்கு உதவுவது மட்டமன்றி உங்களது ஓய்வூதியத் திட்டத்திற்கும் ஒரு இன்றிமையாத ஒன்றாகவும் இருக்கின்றது.

*RRSP* ஆனது உங்களுக்கும் (*Annuitant*) உங்களது வங்கிக்கும் (*Issuer*) இடையிலான உடன்படிக்கையாகும். ஒரு குறிப்பிட்ட வருட காலத்திற்கு இச் சேமிப்புத் திட்டத்தில் நீங்கள் செலுத்தும் பணமானது வேறு வியாபாரங்களை நடாத்துவதற்கு பயன்படுத்தப் பெற்று அதனால் வரும் இலாபமானது நீங்கள் செலுத்திய தொகையை இட்டு உங்களுக்கு வருமானமாக உங்களது திட்டத்தில் வைப்புச் செய்யப்படுகின்றது.

**RRSP ஆனது மூன்று முக்கிய விடயங்களில் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுகின்றது.**

1. *RRSP* இல் பணம் செலுத்துவதன் மூலம் ஒரு குறிப்பிட்டத் தொகை வரையில் நீங்கள் பணம் செலுத்தும் வருமான வரித்தொகையை குறைக்கக் கூடியதாக இருக்கின்றது.

2. உங்கள் *RRSP* முதலீடானது மற்றைய முதலீடுகளுடன் ஒப்பிடும் போது மிக அதிக வேகத்தில் வளர்ச்சியடையக் கூடியதாக இருக்கின்றது. ஏனென்றால் ஒவ்வொரு வருடமும் வளர்த்த தொகை நீங்கள் ஓய்வு பெறும்வரை வரி செலுத்த வேண்டியது இல்லை. எனவே உங்களது முதலீடானது வரி இல்லாமல் பல மடங்காகப் பெறக் கூடியதாக இருக்கின்றது.


3. *RRSP* திட்டத்தில் இருந்து உங்களது பணத்தை எடுக்கும் வரையில் நீங்கள் வருமான வரி செலுத்த வேண்டி இருக்காது. எனவே இது ஒரு நல்ல சேமிப்புத் திட்டமாக அமைந்து உங்களுக்கு உண்மையாக பணம் வேண்டிய காலத்தில் பயன்படுத்துவதற்கு அதாவது நீங்கள் வேலையில் இருந்து ஓய்வு பெறும் வயதில் உபயோகிப்பதற்கு உதவியாக இருக்கின்றது.

*RRSP* ஐ பொறுத்த வரையில் 2 வகையான சேமிப்புக்கள் இருக்கின்றன. வங்கிகள் மூலமாகவோ அல்லது மற்றைய சேமிப்பு நிறுவனங்கள் மூலமாகவோ பணத்தை வட்டி தரக்கூடிய வைப்புகளில் செலுத்தலாம். உதாரணமாக. உத்தரவாதமான வைப்புப் பத்திரங்கள் (*GIC*) மற்றும் நாளாந்த வட்டி தரக்கூடிய கணக்குகள் (*Daily Interest Saving Accounts*) என்பவற்றில் உங்களது முதலீட்டை செலுத்தலாம். இது தவிர பல கூட்டுச் சேமிப்புத் திட்டங்களும் (*Mutual Fund*) உள்ளன. இக்கூட்டுச் சேமிப்புத் திட்டங்களை பொதுவாக வங்கிகளில் ஆரம்பிக்கலாம். இக் கூட்டுச் சேமிப்புத் திட்டத்தில் வைப்பு இடும் போது உங்களது பண்மானது பல வகையான சேமிப்புத் திட்டங்களில் இடம்பெற்று அதனால் வரும் வருமான-மானது உங்களது வைப்புத் தொகையிலிடடுத் தரப்படுகிறன்றது. இது தவிர நீங்கள் முடிவு எடுக்கக் கூடிய (*Self Direct*) *RRSP* ஐத் திட்டமும் உள்ளன. இப்படியான திட்டத்தை மிகவும் இதில் அனுபவும் வாய்ந்த சேமிப்பாளர்கள் தான் வைத்திருப்பது வழக்கம். (தொடரும்)

**Mark Markandu, CGA**
**Certified General Accountant**
**416 290 0946 / 416 834 6660**


**ACTION HONDA**

புதிய பழைய
**HONDA, VOLVO**
மற்றும் **CHRYSLER**
வாகனங்களை
ஈழத்தமிழ் மகன்
சோதீஸ் இடம்
பெறும்போது




எங்கும் கிடைக்காத குறைந்த விலை
**I will beat any price**
ஆயுள் காலத்திற்கு
Oil Change இலவசம்
**Life time Oil change**
சிறந்த நேர்மையான சேவை
**Best Service**





Call me Now!! **416-704-1179**

உங்களுக்காக காத்திருக்கும் நேரம்
**Mon, Fri, Sat: 9am- 6pm**
**Tues, Wed: 12pm- 9pm**
**4334 Kingston Rd, Scarborough**




நியூ மிலேனியத்தில்
ஸ்காபரோவில் 11வது வருட தன்னிகரற்ற சேவை

உங்கள் சகலவிதமான ஐரோப்பிய, ஜப்பானிய, அமெரிக்க வாகனத்திருத்த வேலைகளுக்கும் நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்

**Also Air Conditioning Service & Repair**

**NTE AUTO INC.**
**New Trade Engineering**

என். ரி. இ. ஒட்டோ இங்க்
சிவபாலன்

CONTACT: SIVABALAN
☎: (416) 750 - 1573
151 NANTUCKET BLVD., UNIT #12, SCARBOROUGH, ONT.



IN NEW MILLENNIUM WE ARE ENTERING 10TH YEAR SERVICE IN SCARBOROUGH

# விளையாட்டுத் தகவல்கள் (93)



-எஸ். கணேஷ்

## 777 ஆட்டங்களை தாண்டி வரும் உலககிண்ணம்!!!

# Final Competition – Game Schedule

| Group E | Group F | Group G | Group H |
|---|---|---|---|
| Germany | Argentina | Italy | Japan |
| Saudi Arabia | Nigeria | Ecuador | Belgium |
| Republic of Ireland | England | Croatia | Russia |
| Cameroon | Sweden | Mexico | Tunisia |

| Date | | Match | Group | Venue | Time | Team | | Team |
|---|---|---|---|---|---|---|---|---|
| Wednesday | 12.06.02 | 37 | F | Miyagi | 15:30 | Sweden | vs | Argentina |
| | | 38 | F | Osaka | 15:30 | Nigeria | vs | England |
| | | 39 | B | Daejeon | 20:30 | South Africa | vs | Spain |
| | | 40 | B | Seogwipo | 20:30 | Slovenia | vs | Paraguay |
| Thursday | 13.06.02 | 41 | C | Suwon | 15:30 | Costa Rica | vs | Brazil |
| | | 42 | C | Seoul | 15:30 | Turkey | vs | China PR |
| | | 43 | G | Oita | 20:30 | Mexico | vs | Italy |
| | | 44 | G | Yokohama | 20:30 | Ecuador | vs | Croatia |
| Friday | 14.06.02 | 45 | H | Osaka | 15:30 | Tunisia | vs | Japan |
| | | 46 | H | Shizuoka | 15:30 | Belgium | vs | Russia |
| | | 47 | D | Incheon | 20:30 | Portugal | vs | Korea Republic |
| | | 48 | D | Daejeon | 20:30 | Poland | vs | USA |

### 2ND STAGE – Round of 16

| Date | | Match | Venue | Time | Team | | Team | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Saturday | 15.06.02 | 49 | Seogwipo | 15:30 | 1st E | vs | 2nd B | = | (1) |
| | | 50 | Niigata | 20:30 | 1st A | vs | 2nd F | = | (5) |
| Sunday | 16.06.02 | 51 | Oita | 15:30 | 1st F | vs | 2nd A | = | (6) |
| | | 52 | Suwon | 20:30 | 1st B | vs | 2nd E | = | (2) |
| Monday | 17.06.02 | 53 | Jeonju | 15:30 | 1st G | vs | 2nd D | = | (3) |
| | | 54 | Kobe | 20:30 | 1st C | vs | 2nd H | = | (7) |
| Tuesday | 18.06.02 | 55 | Miyagi | 15:30 | 1st H | vs | 2nd C | = | (8) |
| | | 56 | Daejeon | 20:30 | 1st D | vs | 2nd G | = | (4) |

### 2ND STAGE – Quarter Finals

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Friday | 21.06.02 | 57 | Shizuoka | 15:30 | W (5) | vs | W (7) | = | (C) |
| | | 58 | Ulsan | 20:30 | W (1) | vs | W (3) | = | (A) |
| Saturday | 22.06.02 | 59 | Gwangju | 15:30 | W (2) | vs | W (4) | = | (B) |
| | | 60 | Osaka | 20:30 | W (6) | vs | W (8) | = | (D) |

### 3RD STAGE – Semifinals

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| Tuesday | 25.06.02 | 61 | Seoul | 20:30 | W (A) | vs | W (B) | = | (AB) |
| Wednesday | 26.06.02 | 62 | Saitama | 20:30 | W (C) | vs | W (D) | = | (CD) |

### 3RD STAGE – Finals

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| Saturday | 29.06.02 | 63 | Daegu | 20:00 | L (AB) | vs | L (CD) |
| Sunday | 30.06.02 | 64 | Yokohama | 20:00 | W (AB) | vs | W (CD) |

**FIFA RANGING (JANUARY 16, 2002)**

| | | |
|---|---|---|
| 1. France | 2. Argentina | 3. Brazil |
| 4. Protugal | 5. Colombia | 6. Italy |
| 7. Spain | 8. Holland | 9. Mexico |
| 10. England | 11. Germany | |

**பாகம்:- 2**

சென்ற வாரம் 'உலக தமிழோசை' இதழில் உதைப்பந்தாட்டம் - உலக கிண்ணம் 2002 முதலாம் பகுதியைப் பார்த்தோம். [illegible]வ் இதழில் இறுதிச் சுற[illegible]ன் விபரங்களைப் பார்ப்போம். சென்ற வாரம் Group A, B, C, D பற்றி ஆராய்ந்தோம். இவ்வாரம் Group E, F, G, H ஐப் பார்ப்போம். ஒவ்வொரு Group இல் இருந்தும் நான்கு நாடுகளில் இருந்து Group Winner, Runners - up என இரண்டு நாடுகள் தெரிவு செய்யப்பட்டு மொத்தம் 16 நாடுகள் Round - 16 இல் மோதும். இதில் 8 நாடுகள் தெரிவு செய்யப்பட்டு கால் இறுதியாட்டத்தில் மோதும். இதன் விபரங்களை இங்கு காணலாம். 1954ஆம் ஆண்டின் பின்பு 48 வருடங்களின் பின்பு துருக்கி (Turkey) நாடு மீண்டும் உலக கிண்ண இறுதிச் சுற்றில் தெரிவு பெற்றுள்ளது. 1990ஆம் ஆண்டின் [illegible]ன்பு உருகுவேயும், Poland [illegible]ம் மீண்டும் உலக கிண்ணத்தில் பிரவேசித்துள்ளமை மகிழ்ச்சியான விடயம். ஆனால் Holland நாடு இம்முறை உலக கிண்ணப் போட்டிக்கு தெரிவாகாமை மிகவும் கவலைக்குரிய ஒரு விடயமாகும். ஜப்பானும், கொரியாவும் இணைந்து நடாத்தும் போட்டிகளில் மிகவும் கடினமான ஒரு Group என்றால் Group F ஆகும். இதில் ஆர்ஜென்ரினா, நைஜீரியா, இங்கிலாந்து, சுவீடன் ஆகிய நாடுகள் அடங்கும். இதில் இப்போது ஆர்ஜென்ரினா பல வெற்றிகளை குவித்து வருவது யாவரும் அறிந்ததே. ஜனவரி 16ஆம் திகதி வெளிவிடப்பட்ட FIFA தரப்பட்டியலில் ஆர்ஜென்ரினா இரண்டாவது இடத்தை [illegible]ப் பிடித்துள்ளது. 200[illegible]ம் ஆண்டிற்கான Best Mover இடத்தை இம்முறை Costa Rica பிடித்துள்ளது. இம்முறை FIFA தரப் பட்டியலில் 10 இடங்களை ஒரே முறையில் தாண்டிய கொலம்பியா இறுதி நேரத்தல் உலக கிண்ணத் தெரிவுப் போட்டியில் இருந்து தவறியமை குறிப்பிடத்தக்கது. மிகக் கடினமான போட்டி நிலவும் உலக கிண்ணப் போட்டியில் யார் வெல்லுவார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.

# அன்றிலிருந்து இன்றுவரை சினிமா

## 1930ஆம் ஆண்டு தொடக்கம் வெளியான தமிழ்த் திரைப்படங்கள்

–தொகுப்பு - பரம்

### *2001 சிறந்த சினிமா... சிறப்புகள்*

சென்றவாரத் தொடர்ச்சி....

*கடந்த ஆண்டு எந்த நடிகர்களுமே சோடை போனதில்லை! சூரியா - விக்ரம் இருவரையும் சிறந்த நடிகர்களாக. 'தேவி' ஆசிரியர் குழு முடிவு எடுத்திருப்பதால் மற்றவர்கள் சிறந்த நடிப்பைக் கொடுக்கவில்லை என்பது அர்த்தம் ஆகிவிடாது. சிறப்பாக நடித்திருந்ததால் தான் பல ...கள் T.V. மீடியாக்களின் ஆதிக்கத்திற்கும் மத்தியில் 100 நாட்களும் அதைக் கடந்தும் ஓடியிருக்கின்றன.*

*அதேபோல் 100 நாட்கள ஓடாத படங்களில் நடித்திருப்பவர்களையும் குறைவாக எடை போட்டுவிட முடியாது. குறைந்த முதலீட்டில் எடுக்கப்பட்ட 'குட்டி' என்கிற வணிக ரீதியில் வெற்றி பெற இயலவில்லை. ஆனால் படம் பார்த்தவர்களை எப்படியெல்லாம் அசைத்துப் பார்த்தது தெரியுமா? சுவேதா என்ற சிறுமி கண்ணம்மாவாக வாழ்ந்திருந்தாள். விவேக்கின் குணச்சித்திர நடிப்பு மனங்களை கொள்ளை கொண்டு போனது.*

*ஆகவே நடிகர்களிலோ. நடிகைகளிலோ எவரையும் குறைகாண முடியவில்லை! இன்னும் சிறப்பாகச் செய்திருக்க முடியும் என்பதுதான் எமது முடிவு. நடிகைகளுக்கு பெரும்பாலும் கிளாமர் அடிப்படையிலான பாத்திரங்கள் தான் கொடுக்கப்படுகின்றன. தப்பித்தவறி கத..சிரியர்கள் இயக்குநர்களின் பு...ியத்தினால் கனமான பாத்திரங்கள் கிடைத்துவிடும். அப்படி அதிர்ஷ்டப் பரிசு பெற்றவர்கள் வெகு சிலர்.*

*சிம்பரன். லைலா. காவேரி இம் மூவர் மட்டுமே! ஜோதிகாவை இந்தப் பட்டியலில் சேர்த்துகி கொள்ள இயலாது! அவரால் மட்டுமே செய்யக் கூடிய சில 'ரீன் ஏஜ்' கரக்டர்களை மட்டும் வைத்து முடிவு எடுக்க முடியாது. சிம்ரனின் "பிரியமானவளே" 2000இல் வெளியாகி 2001இலும் ஓடிய படம். அற்புதமாக நடித்திருந்தார். "ஒப்பந்த மனைவியாக" வாழவேண்டிய கட்டாயத்தை அற்புதமாக பிரதிபலித்திருந்தார்.*

*ஆனால் அந்தப் படம் 2000இல் திரையிடப்பட்ட படம்! நடிகை லைலா - 'தில்'. 'நந்தா' இந்த இரண்டு படங்களிலும் வித்தியாசமான வேடங்கள்.'12பி'' என்பதில் வழக்கமான காதலி. முரடனை காதலிப்பவராக 'தில்' லில் அது ஹீரோ படமாகிவிட்டது. 'நந்தா'வில் இலங்கைத் தமிழ்ப் ...ணாக வந்திருக்கிறார். கு..றசொல்ல முடியவில்லை. கண்ணாடியில் அவர் பலவிதாமக பாவங்களைக் காட்டும் போதே அவர் சிறந்த நடிகைக்கு உரியவர்தான் என்பது தெரிகிறது!*

*ஆனால் வசனம் பேசாமல் நினைவுக் காட்சிகளில் கூட டூயட் பாடாமல். 'காசி' இல் காவேரியாக வாழ்ந்து நம்மை கண்ணீர்முரடனை காதலிப்பவராக 'தில்' லில் அது ஹீரோ படமாகிவிட்டது. 'நந்தா'வில் இலங்கைத் தமிழ்ப் பெண்ணாக வந்திருக்கிறார். குறைசொல்ல முடியவில்லை. கண்ணாடியில் அவர் பலவிதாமக பாவங்களைக் காட்டும் போதே அவர் சிறந்த நடிகைக்கு உரியவர்தான் என்பது தெரிகிறது!*

*ஆனால் வசனம் பேசாமல் நினைவுக் காட்சிகளில் கூட டூயட் பாடாமல், 'காசி' இல் காவேரியாக வாழ்ந்து நம்மை கண்ணீர் வெள்ளத்தில் மூழ்கடித்தவர் காவேரிதான்! கற்பிழந்துவிட்டோம் என்கிற நினைவைத் தூக்கத்தில் கூட மறக்க முடியவில்லை என்பதை முகத்தில் எவ்வளவு பிரமாதமாக பிரதி பலித்திருக்கிறார் தெரியுமா? விக்ரமின் கைப்பற்றி வரும்போதெல்லாம் குற்ற உணர்வு முள்ளாகக் குத்தும் அவதியை இலட்சுமியாக வருபவரால் கூட வெளியிட முடியவில்லை!*

*எனவே எமது பார்வையில் காவேரிதான் சிறந்த நடிகையாகத் தெரிகிறார். கடந்த ஆண்டின் சிறந்த நடிகர் எனும் சிறப்பினை இருவருக்கு அளிக்கிறோம். சூரியா - விக்ரம். சிறந்த நடிகை - காவேரி. சிறந்த படங்கள் 12 படங்களைச் சொல்ல வேண்டியது. 'தெனாலி'. 'பிரண்ட்ஸ்'. 'தீனா'. 'வாஞ்சிநாதன்'. 'உள்ளம் கொள்ளை போகுதே'. 'பத்ரி'. 'சொன்னால்தான் காதலா'. 'ஆனந்தம்'. 'சிட்டிசன்'. 'தில்'. 'சாக்லெட்'. 'பூவெல்லாம் உன்வாசம்'. 'நரசிம்மம'. 'சமுத்திரம்'. இவைகளைத் தவிர 2000இல் வெளியாகி 2001இல் 100 நாள் விழா கொண்டாடிய 'வானவில்'. 'சினேகிதியே'. 'பிரியமானவளே' என்ற படங்களும் உண்டு.*

*15 படங்களும் மணிமணியானவை என்றாலும் எதை முன்னிறுத்துவது? 'தெனாலி', 'பிரண்ட்ஸ்' வெள்ளிவிழாப் படங்கள். 'தீனா' 125 நாள் ஓடிய படம். கமலஹாசனின் வித்தியாசமான யாழ்ப்பாண தமிழர் வேடமும் உச்சரிப்பும் படத்தை வெள்ளிவிழா காண வைத்தது. பாடல்களும் நகைச்சுவைகளும் சுலபமாக 'பிரண்ட்ஸை' வெள்ளி விழாவுக்கு கொண்டு சென்றன. அஜித்தின் ஆவேசமும் பாடல்களும் 'தீனா'வை வெற்றி வீரனாக அங்கீகரித்தன.*

*இந்த மூன்று படங்களும் வெற்றிப்படங்களே! வணிகரீதியாக வசூலை வாரிக் கட்டிக் கொண்ட படங்கள்தான். மறுப்பேதும் இல்லை! பொழுது போக்கு விடயங்கள் நிரம்பி வழிந்த படங்கள். என்றாலும் 'ஆனந்தம்'. 'சமுத்திரம்' இவ்விரு படங்களும் குடும்பத்துச் சிக்கல்களை எடுத்துச் சொல்லி தனியாக நடைபோட்ட படங்கள் ஆகும். சகோதரர்களுக்கு இடையே எழும்பிரச்சனைகளை மனைவிகளால் ஏற்படும் சின்னச் சின்ன சண்டைகள் என்று சிறப்பாக எடுத்துக் காட்டப்பட்டிருந்தன. எனவே 'ஆனந்தம்'. 'சமுத்திரம்' இரண்டுமே சிறப்புக்குரிய படங்களே!*

தேவி' இந்த அற்புத கலைஞர்களை நெஞ்சு நிறைய வாழ்த்திப் பாராட்டுகிறது.

பிரமாண்டம் - ஆளவந்தான் சிறந்த நடிகர் - சூரியா (நந்தா) விக்ரம் (காசி) சிறந்த நடிகை - காவேரி (காசி) சிறந்த படம் - ஆனந்தம் சிறந்த இசை அமைப்பாளர் - இளையராஜா (பிரண்ட்ஸ்) சிறந்த இயக்குநர் - பாலா (நந்தா) சிறப்பு விருது (குட்டி)


# UNITED PERSONAL INJURY ASSOCIATES

## வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?




அனுபவசாலியின் ஆலோசனை பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்

உங்கள் அறியாமையால் வாரத்திற்கு
**$1000.00**
வரை இழப்பதற்கு அனுமதியாதீர்கள்

கனடாவில் எங்களுக்கு 30 வருடத்திற்கும் அதிகமான அனுபவம் உள்ளது

பண இழப்பீட்டு தீர்வு மற்றும் காப்புறுதி நிறுவனத்திற்கு எதிராக வழக்கு தொடர்வதில் உங்களுக்குள்ள உரிமைகளை அறிய

# UNITED PERSONAL INJURY ASSOCIATES

*The Car Accident People*

**ஒன்ராறியோவின் மிகப்பெரிய ஸ்தாபனம்**

**பிழையான அனுபவமில்லாத ஆலோசனைகளுக்குள் விழுந்து விடாதீர்கள்**

**உங்களுக்குத், தெரியுமா?**

இந்த விபத்து உங்கள் தவறில்லாவிடின் உங்களால் **$172,000.00** வரை இழப்பீடாகப் பெறமுடியும். அத்துடன் இதனால் ஏற்படும் வலி, வருத்தம், வேலை இழப்புப் பணம், வாழ்வில் இழந்த மகிழ்ச்சி மற்றும் பல்வகையான இழப்புகளுக்கு நஷ்டஈடாக பல்லாயிரம் டொலர்கள் வரையில் பெறமுடியும்.

**விபத்து உங்கள் தவறானாலும் கூட**

உங்களால் **$172,000.00** டொலர் வரையும் வருமான இழப்பீடாக வாரத்திற்கு $400.00 வரையும் இன்னும் பலவகை இழப்பீடுகளையும் பெறமுடியும். மனரீதியாகவோ அல்லது உளரீதியாகவோ பாதிக்கப்பட்டிருப்பின் இன்றே அழையுங்கள் "யுனைடெட்" (நாம் 25இற்கும் அதிகமான மொழிகளில் சேவையாற்றுகிறோம்)

இலவச ஆலோசனைகளுக்கும் தமிழில் தொடர்புகளுக்கும் இன்றே அழையுங்கள்

## தீபன் - 416-505-9804

- 5255 Yonge Street, Suite 200, North York
- 257 Dundas Street E., Unit 1, Mississauga
- 29 King Street E., Unit 7, Kitchener
- 75 Collier St., Unit A, Barrie
- 507-251 Bank Street, Ottawa
- 195 Main St. East, 1st Floor, Hamilton




தேவி' இந்த அற்புத கலைஞர்களை நெஞ்சு நிறைய வாழ்த்திப் பாராட்டுகிறது.

பிரமாண்டம் - ஆளவந்தான்
சிறந்த நடிகர் - சூரியா (நந்தா) விக்ரம் (காசி)
சிறந்த நடிகை - காவேரி (காசி)
சிறந்த படம் - ஆனந்தம்
சிறந்த இசை அமைப்பாளர் - இளையராஜா (பிரண்ட்ஸ்)
சிறந்த இயக்குநர் - பாலா (நந்தா)
சிறப்பு விருது (குட்டி)

<u>றொப் (Top) படம்</u>

* ஆனந்தம்
* உள்ளம் கொள்ளை போகுதே
* சமுத்திரம்
* சாக்லெட்
* சிட்டிசன்
* டும் டும் டும்
* தில்
* பத்ரி
* பூவெல்லாம் உன் வாசம்
* வாஞ்சி நாதன்

<u>றொப் (Top) பாடல்கள்</u>

* ருக்கு....ருக்கு (பிரண்ட்ஸ்)
* சொல்லாமல் தொட்டுச் செல்லும் (தீனா)
* வசீகரா (மின்னல்)
* திருடிய இதயத்தை திருப்பிக் கொடுத்துவிடு (பார்வை ஒன்றே போதுமே)
* இஞ்சேருங்கோ... (தெனாலி)
* தேசிங்கு ராஜா (டும் டும் டும்)
* பூக்காரா (சிட்டிசன்)
* தாலாட்டும் காற்றே வா (பூவெல்லாம் உன் வாசம்)
* அச்சச்சோ புன்னகை (ஷாஜகான்)
* முன்பனியா (நந்தா)

நன்றி - தேவி



# தூறல்

**காதல் + அரிச்சுவடு = பிரமசரியம்**

எங்கள் எல்லோருக்கும் காதல் வந்ததுண்டு. வாழ்வின் ஏதோ ஒரு கட்டத்தில் நாங்கள் இதற்கு உட்பட்டுள்ளோம். அதேபோல் நாங்கள் பிரமசரியத்தைக் கடந்துள்ளோம் அல்லது கடக்கவுள்ளீர்கள். காதல் கனிந்து திருமணத்தை முடிப்பதற்கு முன்பாக பல சம்பவங்கள் நடந்தேறிவிடும். கனடாவில் பலருக்கு காதலியை (காதலனை) அல்லது நிச்சயிக்கப்பட்ட நபரை முத்தம் கொடுத்துவிட ஆசை. கைகோர்த்து. சினிமா. பூங்கா. நயகரா நீர்வீழ்ச்சி (Niagrara Falls). Wonderland, Thousand Island சென்றுவர ஆசை. அதற்கு மேல் திருமணத்திற்கு முன்பாக குடும்பம் நடாத்திவிட ஆசை!

இந்த மன உணர்வுகள் மூன்று அழகான திரை வடிவங்களாக உருப்பெற்றுள்ளன.

1. அனுராத ரமணன் திரைக் கதைக்கு. நாதா உருவம கொடுத்துள்ளார். சின்னத் திரையில் Bachelors Party என்னும் பெயரில்.
2. பட்டில் இன் இயக்கத்தில் ஆங்கில மொழியில வெளிவந்துள்ள ABCD - American Bom Confused Desi
3. தங்கப்பச்சானின் இயக்கத்தில் "அழகி"

*ABCD - American Bom Confused Desi*
(Markham & Ellesmere Texduo Court இல் உள்ள KNN Video கடையில் வீடியோ பிரதிகளைப் பெற்றுக் கொள்ளலாம்)
இந்தியத் தாயால் வளர்க்கப்படும் இரு பிள்ளைகள் தாயின் விருப்பத்துக்கு அமைய. இந்திய முறையில் வளர்ந்த பெண்ணை நிச்சயம் பண்ணுகிறான் தனயன். தாயின் விருப்பத்துக்கு இணங்க மறுக்கும் மகள். அவளுக்கு வெள்ளைக் காதலன். பின்னர் தாயால் அறிமுகப் படுத்தப்பட்டவனுடன் சினேகம் கொள்கிறாள். உறவும் கொள்கிறாள். அவன் திருமணம் செய்யுமாறு கேட்கும் பொழுது. ஒருசில வாரப் பழக்கத்துடன் எவ்வாறு திருமணம் செய்து கொள்வது என நிராகரிக்கிறாள். தனயன் நிச்சயிக்கப்பட்ட பெண்ணுடன் உறவும் கொள்கிறான். ஆனால் அவனாலும் அவளை மனதளவில் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தாய் இறந்து விடுகிறாள். மகள் வெள்ளையனைத் திருமணம் செய்து கொள்கிறாள். மகன் நிச்சயிக்கப்பட்டவளை திருமணம் செய்ய முடியாது என நிராகரிக்கிறான்.

அமெரிக்காவில் வாழும் இந்தியப் பிள்ளைகளிடம், ஏன் எம்மவருக்கும் பொருந்தும். திருமணம், உடலுறவு பற்றிய கருதுகோள்கள் எவ்வாறு உள்ளன என விமர்சிக்கிறது இப்படம். அனைவரும் அவசியம் பார்க்க வேண்டிய படமிது.

## *Bachelors Party* (பிதுவி)

புலம்பெயர் நாடுகளில் திருமணத்திற்கு முன்பாக பிரமசரிய துறவு விருந்து (பிதுவி) என்ற சடங்கு பிரபல்யமானது. இங்கு போத்தல்கள். கால்கள். எலும்புகள் போன்றன படைக்கப்படும். இறுதியில் சிலர் வாந்தி எடுப்பதுடன் நிறைவடையும். திருமணம் என்ற மோசமான சடங்கின் பின்னர் இவ்வாறான சுதந்திரங்கள் கிடையாது என்பதே இதன் நோக்காகும். இப்பொழுது சுதந்திரம் என்றால் என்ன என்ற கேள்வியுடன். திருமணம் எல்லாருக்கும் தேவையா என்ற கேள்வியும் எழுகிறது.


இவ்வாறான "பிது வி" யில் எவ்வாறு ஆண்கள் நடந்து கொள்கிறார்கள் என சுதந்திரமாகத் திரியும் ஒரு பெண் விரும்புகிறாள். Computer வகுப்பின் இறுதி நாள் ஆசிரியர்களும் (இளைஞர்கள். திருமணமாகாதவர்கள். ஒரே அறையில் தங்குபவர்கள்) இரு மாணவிகளும் மகாபலிபுரம் செல்கிறார்கள். அங்கு நடந்த "பிதுவி" யில் இந்தப் பெண் கலந்து கொள்கிறாள். மறுநாள் காலை எழுந்த பொழுது அவள் பாலியில் வல்லுறவுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளாள். இது தெரிந்த இளைஞர்கள் ஓடி வந்துவிடுகிறார்கள்.

யார் இதைச் செய்தது அவளுக்குள் கேள்வி எழுகிறது. நடக்கவிருந்த நிச்சயதார்த்தத்தை குழப்பி இவர்களது அறையிலேயே தங்குகிறாள். இறுதியாக இது நடந்த மகாபலிபுர விடுதி அறைக்கு இவர்கள் நால்வரையும் வரும்படியும் இல்லையேல் தற்கொலை செய்து விடுவேன் என மிரட்டுகிறாள். குற்றம் நடை-பெற்ற இடத்துக்கு குற்றவாளியை அழைத்துச் சென்றால் உண்மை தெரிந்து விடும் என்ற பொலீஸின் உளவியலை இவளும் பின்பற்றுகிறாள்.

ஸ்கிரிப்பட லென்ஸின் "நிரபராதிகளின் காலம்" நாடகப் பாணியில் விசாரணை நடைபெறுகிறது. ஒருவர் மாற்றி. ஒருவர் குற்றம் சாட்டப்படுகின்றனர். அவர்களது வக்கிர உணர்வுகள் அம்பலப்படுத்தப்படுகின்றன. இறுதியில் குற்றம் செய்தவன் ஓடிவிடும் பொழுது வீதியில் விபத்துக்குள்ளாகி இறந்து விடுகிறான். அவர்கள் அனைவரும் திரும்பும் பொழுது அவனது உடல் வீதியில் கிடத்தப்பட்டுள்ளது. நண்பர்கள் அவளைப் பார்க்க வருமாறு அழைக்கின்றனர். அவள் மறுத்து விடுகிறாள்.


COMPUTER SERVICE

* COMPUTER REPAIR
* INSTALL NEW PERIPHERALS
* INSTALL SOFTWARE
* BASIC INTERNET TUTORIAL
* BASIC COMPUTER TUTORIAL



CALL: 647-274 -9931 KANNAN

RHYTHMS BANQUET SERVICE

திருமணம், பிறந்ததின விழா, பூப்புனித நீராட்டு விழா மற்றும் சகல நிகழ்வுகளிற்கான மண்டபத்தினுடன் கூடிய சகல சேவைகளும் ஒரே இடத்தில் நியாயமான செலவில் பூரண திருப்தியுடன் செய்து கொள்ள அழையுங்கள்.

பாலா: 416-525-6000 மோகன்:416-303-4600


காதல் என்பது வெறும் இனக்கவர்ச்சியே எனக் கூறும் அவள் தன்னுடன் முதல் உறவு கொண்டவன் முகம் எனக்குத் தெரிய வேண்டும். நடந்த சம்பவம் சாதாரண உடல் காயமே என வாதிடும் அவள், இறுதியில் அவனைப் பார்க்க மறுப்பதுடன் கற்புக்கு அழுத்தம் கொடுக்கிறாள். மிகவும் சிறப்பாக எடுக்கப்பட்டுள்ள சின்னத் திரைக் காவியமிது.

## அழகி



"குடி முந்திரி" என்ற சிறுகதை தொகுப்பில் வெளிவந்த "கல்வெட்டு" சிறுகதையை மையமாகக் கொண்டு எடுக்கப்பட்டுள்ளது. சிறுகதை ஆசிரியரும். இயக்குனரும் ஒருவரே. தங்கப்பச்சான் ஏற்கனவே "வெள்ளைமாடு" என்னும் சிறுகதைத் தொகுப்பையும் வெளியிட்டுள்ளார். சிற்றிலக்கிய வட்டத்தில் பரவலாக அறியப்பட்டவர். "செம்புலம்" என்னும் பதிப்பகத்தையும் நடாத்தி வருகிறார். கலைச்சினிமா. இடைநிலைச் சினிமா என்பன பற்றி நன்கறிந்தவர். தமிழில் நல்ல கலைப் படைப்புக்கள் வரவில்லை என ஆதங்கப்படுபவர். பலரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த இவரது படைப்பே "அழகி".

பள்ளிக் காதல் - திருமணமாகி குழந்தையும் பெற்று பின்னர் காதலியை மிகவும் வறுமையான நிலையில் சந்திக்கிறான், உதவி செய்கிறான். மனைவிக்கு இவர்களது காதல் தெரிய வர பிரச்சனைகள் ஏற்படுகிறது. பின்னர் வழமையான தமிழ்ச் சினிமா.

வறுமையும். காதல் உணர்வுகளையும் வெகு யதார்த்தமாக. மனதைத் தொடும்படி சித்தரித்துள்ளார். எங்கள் அனைவரையும் எங்களது பழைய காதல் உணர்வுகளை மீட்டி வைக்கிறது. மலையாளப் படங்களில் பொதுவான யதார்த்தமான இந்தப் பண்பு இங்கும் ஆரம்பிக்கிறது. பாத்திரத் தேர்வு அருமை - நந்[illegible]ஸ் - Fine, Earth போன்ற படங்களில் நடித்தவர். மிகவும் இயல்பாகச் செய்துள்ளார். அஃதேபோல் பார்த்திபன், தேவயானி இயல்பாக நடித்துள்னர். இறுதிப் பகுதி சினிமாத்தனம் நிறைந்தது.

சினிமா மொழி என்பது பார்வையாளர்களை நேரடியாக அவர்கள் பார்வைப் புலன்கள் மூலம் நிகழ் தளத்துக்கு இட்டுச் செல்வது. இங்கு வசனங்கள் தேவையைப் பொறுத்தே பயன்படுகிறது. பார்த்திபன் கதை சொல்லும் பண்பு சினிமா மொழியினை முறையாக கையாளப்படவில்லை என்பதையே காட்டுகிறது. அதே சமயம் இளைராஜாவின் பின்னணி இசை பல காட்சிகளைச் சிறப்பாக நகர்த்துகின்றது. தேவையற்ற பாடல்கள்.... தமிழ்த் திரையுலகில் நம்பிக்கையுடன் காத்திருக்கலாம். இவரது எதிர்கால படைப்புக்களை

தமிழ்த் திரையுலகம் ஆரோக்கியமான பக்கத்துக்குத் திரும்புகிறது என்பதற்கு "காசி". "நந்தா". "காற்றுக்கென்னவேலி" இவ் வரிசையில் "அழகி"யும் நம்பிக்கையளிக்கிறது.


-வானரன்-



# விண்வெளி

**- தருபவர் - கனி**

## அந்நியர்கள்:- 77



ஒளியின் வேகத்தில் பயணிக்கும் போது நேரம் மெதுவாகக் கடக்கிறது என்பதனைச் சென்ற தடவை பார்த்தோம். அதன்படி ஒளியின் வேகத்தில் 10 வருடங்கள் பயணித்த ஒருவர் திரும்பப் பூமியிற்கு வரும்போது பூமியானது 8000 வருடங்களைக் கடந்துவிடும் என்று விஞ்ஞானிகள் அயன்ஸ்ரைனின் சார்புக் கொள்கையை மேற்கோள் காட்டிக் கூறுகின்றார்கள். இனி, விண்வெளி வீரர் ஒருவர் ஒளியின் வேகத்தை விடக் கூடுதலான வேகத்தில் பயணித்தால் என்ன நிகழும் என விஞ்ஞானிகள் கூறுகின்றார்கள் எனப் பார்ப்போம்.

முதலில் ஒளியின் வேகத்தை மிஞ்சி எதுவுமே செல்ல முடியாது என்பதனை ஞாபகத்திற்குக் கொண்டு வருவோம். அப்படியில்லாமல் ஒளியின் வேகத்தைவிட வேகமாகப் பயணிக்கக் கூடிய விண்கலத்தில் ஒருவர் பயணிக்கின்றார் எனக் கொள்வோம் சிறிது காலம் பயணம் செய்த பின்னர் மீண்டும் பூமிக்கு வருகின்றார் என்போம். என்ன பூமியில் நிகழ்ந்திருக்கும்? அவ் விண்வெளி வீரர் தமது கடந்த காலத்துள் வந்திருப்பார். அதாவது 2000ஆம் ஆண்டு தனது பயணத்தை ஆரம்பித்து இருந்தால், ஒளியின் வேகத்தை விட அதிகமான வேகத்தில் பயணம் செய்து சில காலத்தின் பின் மீண்டும் பூமிக்கு அவர் திரும்பி வரும் போது பூமி அப்பொழுது 1910ஆம் ஆண்டில் இருக்கும். அதாவது ஒருவேளை அவர் தமது இறந்த பாட்டன் அல்லது பூட்டனைக் காணலாம். அவருடன் கதைக்கலாம். கூட இருந்து தேநீர் அருந்தலாம். கொள்கை ரீதியில் இவை எல்லாம் விஞ்ஞானிகளால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன.

*Time Travellers* எனும் விஞ்ஞானப் புதிர்த் திரைப்படங்கள் கதைகள் எல்லாம் இந்தத் தத்துவத்தின் அடிப்படையிலேயே எழுதப்பட்டுள்ளன. பிரபலமான *Terminater, Ex-Terminators* போன்ற படங்கள் எல்லாம் கூட இதன் அடிப்படையிலேயே வெளிவந்தன. இவை கற்பனையே எனினும் எதிர்காலத்தில் இவை சாத்தியமா? கேள்விக்குறிதான்!

ஆக, வெளிக்கிரகவாசிகளைத் தேடும் எமது முயற்சியில் நேரடியாகப் பயணித்து அவர்களைக் கண்டு, கதைத்து மீண்டும் பூமிக்கு வந்து அச்செய்திகளை எல்லாம் கூறுவது என்பது இன்று நாம் இருக்கும் விஞ்ஞான தொழில்நுட்ப அறிவியல் நிலையில் இயலாத ஒன்று. தூரம் பிரயாணக்கதி, எரிபொருள். மேலும் பௌதீக - கால வேறுபாடுகள் எனப் பலவகையான தடைகள், பிரச்சனைகள் உள்ளன. இனிவரும் காலம் ஒன்றில் இத்தடைகளைத் தாண்டி இம்முயற்சி பயனளிக்குமா என்பதனைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். இதனால் மனித இனம் மனம் தளர்ந்துவிடவில்லை. வேறுபல வழிகளில் இம்முயற்சியை எடுக்கத் தொடங்கியது. அதில் ஒன்று பூமியில் இருந்து கொண்டே பூமியைப் போன்ற வேறு கிரகங்களைத் தேட முயற்சி செய்யத் தொடங்கியது. அதன் பயனாக சூரியன் இல்லாத வேறு நட்சத்திரங்களின் கோள்கள் பல கண்டு பிடிக்கப்பட்டன. இவ்விதமாக கண்டுபிடிக்கப்பட்ட கோள்கள் எல்லாமே நமது சூரியக் குடும்பத்தின் பெரிய கோளாகிய யூப்பிட்டரை - வியாழனை விடப் பெரியனவாகவே உள்ளது. கண்டுபிடிக்கப்பட்ட மிகச் சிறிய கோளே வியாழனைப் போல் 2.2 மடங்கு பெரியது. நமது வியாழனே ஒரு வாயுக்கோள் ஆகும். எனவே கண்டுபிடிக்கப்பட்ட கோள்கள் கூட வாயுக் கோள்கள் ஆகக் கூட இருக்கலாம்.

வியாழனை விடச் சிறிய அளவில் உள்ள கோள்களை இனம் காண்பது இப்போதைக்கு மிகவும் சிரமம் - இயலாது என்றே கூற வேண்டும். ஏனெனில் கோள்வலம் வரும் நட்சத்திரத்தின் பிரகாசம் இச்சிறிய கோள்களை மறைத்துவிடும். நட்சத்திரங்களின் கோள்களை இனம் கண்டு பிடிக்கும். அடுத்த முயற்சியாக அமெரிக்காவின் NASA விண்வெளி ஆராச்சி நிலையம் 2006ஆம் ஆண்டில் விண்கலம் ஒன்றினை அனுப்பி அதன் உதவியுடன் விண்வெளியில் கோள்களைத் தேட முயற்சிக்கிறது.

*KEPLER* எனும் பெயர் கொண்ட இவ்விண்கலம் விண்வெளியில் ஓர் இடத்தில் நின்றபடியே பல நட்சத்திரங்களின் கோள்களைத் தேடத் தொடங்கும். இவ் விண்கலத்தின் பிரதானமான தொழில் பூமியைப் போன்ற கோள்கள் ஏதாவது நட்சத்திரங்களை வலம் வருகின்றனவா என்பதே ஆகும். அவ்விதம் ஏதாவது கோள் ஒன்று இனம் கண்டுபிடிக்கப்படுமாயின் வெளியுலக வாசிகள் - உயிரினங்கள் பூமி அல்லாத வெளிக்கிரகத்தில் இருக்கக் கூடிய வாய்ப்பு இருக்கும் என்பது உறுதியாகும். மேலும் எமது அந்நியர்கள் - ஏலியன்கள் நோக்கிய தேடலும் முதலில் அக்கிரகம் - கோள் நோக்கி வலிமையுடன் குவிக்கப்பட. உண்மைகள் பல வெளிவரலாம். இம்முயற்சியானது சரியானபடி வெற்றியளிக்க வேண்டும் வெற்றியளிக்கும்.

இன்னமும் அந்தியர்கள் பற்றிய தேடல் உண்டு!

14 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

**யோகாஸ்**

☎: (416) 267-0408

## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 127

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | | 4 |
| | ■ | | ■ | ■ | | ■ | |
| | ■ | 5 | | ■ | | ■ | |
| | ■ | | ■ | ■ | 6 | | |
| ■ | 7 | | | ■ | ■ | ■ | |
| 8 | | ■ | 9 | | | 10 | |
| | ■ | 11 | ■ | | ■ | | ■ |
| 12 | | | | 13 | ■ | 14 | |

**இடமிருந்து - வலம்**

1. திருப்தி செய்
4. பாண்டிய அரசன்
5. நுனி
6. ஈரம் உலர்த்தும் துணி
7. வீட்டின் பின்புறம்
8. அடையாளம் இடு
9. காலின் ஒரு பகுதி
12. வெற்றிலையுடன் பாவிப்பது
14. சிற்பம்

**மேலிருந்து - கீழ்**

1. மனங்கவரப்படு
2. வாங்கின விலை
3. சீர்படுத்து
4. உபாயம் செய்தல்
7. சிறிது சிறிதாக உண்
9. கொத்து (கீழ் - மேல்)
10. தோற்றம்
11. இந்திய ரூபாயின் பதினாறில் ஒரு பங்கு
12. முறம் (கீழ் - மேல்)
13. தூளான மண் (கீழ் - மேல்)

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் முலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக்கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் FEBRUARY 24, 2002க்கு முன்னர் விளம்பர நிலையத்திற்கு அனுப்பி வைக்கவும்.

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| எ | ழு | த் | தா | ணி | ■ | ஞா | னி |
| ஞ் | ■ | ■ | து | ரு | வி | ■ | ■ |
| ஞா | ல | ம் | ■ | ஊ | ழி | ய | ம் |
| ன் | ■ | ■ | ம் | ■ | ■ | ■ | ல |
| று | ■ | ■ | ர | ■ | பு | ப் | கா |
| ம் | ம | ர | கி | ■ | தை | ■ | ர் |
| ■ | ■ | ■ | க் | ■ | ய | ■ | தி |
| பு | ப் | டு | உ | ■ | ல் | ழி | எ |

**126இல் வெற்றி பெற்றோர்**

1) R.K. Senthilruban, Scar.. Ont.
2) க. திலகேஸ்வரி, Scar.. Ont.

* ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
* அன்றாட சந்தையில் மரக்கறி, மீன்வகைகளை தினம் தருவித்து வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!
* வாடிக்கையாளர்களின் நன்மை கருதி புதிய இடத்தில்

*733 kennedy Road*
*[Ken-Mark Plaza]*

**தமிழ் நாட்டில் பிரயாண சேவை**

தமிழ்நாட்டில் சென்னையில் தங்குவதற்கு வீட்டு வசதிகளும், சகல இடங்களிற்கு பிரயாணம் செய்வதற்கான வசதிகளும் எங்களால் நியாயமான செலவில் ஒழுங்கு செய்து தரப்படும். தொடர்புகளுக்கு: **044-621-0294**



# கனடிய பாடசாலை-கல்வித்திட்டம்

## விண்ணப்பிக்கும் முறை

கடந்த இதழில் கூறப்பட்ட Canadian Mathematics Competition இல் தங்களது பிள்ளைகளைக் கலந்து கொள்ள வைக்கும் பெற்றோர் முதலில் பாட-சாலை அதிபருடனும். கணித ஆசிரியருடனும் இவ்விடயம் குறித்து கலந்துரையாடுவது அவசியமாகும். ஏனென்றால் இப்பரீட்சைக்கான பதிவுகள் அந்தந்தப் பாடசாலை மூலமே ஏற்படுத்தப்பட வேண்டும். ஒரு பிரிவில் 25 மாணவர்கள் ஒன்றாகக் கலந்து கொள்ளலாம். அதற்குரிய கட்டணம் $25 ஆகும். ஒன்றிலிருந்து இருபத்தைந்து மாணவர்களுக்குள் எவ்வளவு மாணவர்கள் கலந்து கொள்கிறார்களோ அவர்களின் எண்ணிக்கையினால் $25ஐ வகுபட்டு மாணவர்களிடம் அறவிடப்படும். உதாரணத்துக்கு ஒரே ஒரு மாணவனே போட்டியில் ஆர்வம் காட்டும் பட்சத்தில் அந்த மாணவன் மட்டுமே முழுத் தொகையான $25உம் செலுத்த வேண்டியிருக்கும்.

சில சந்தர்ப்பத்தில் பாடசாலை அதிபரோ, மற்றைய ஆசிரியர்களோ இவ்விடயத்தில் ஆர்வம் காட்டாத போது, அதாவது இப்போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்தாவிடில். விருப்பப்படும் மாணவர்கள் வேறு பாட-சாலைகளுடன் கூடக்கலந்து கொள்ளலாம். இவ்வாறான சந்தர்ப்பத்தில் மறுப்புத் தெரிவிக்கும் அதிபரிடம் இம் மாணவர்கள் வேறு பாடசாலையுடன் கலந்து கொள்ளும் அனுமதிக் கடிதம் ஒன்றைப் பெறவேண்டியிருக்கும். இக் கடிதம். இப்போட்டியில் கலந்து கொள்ளும் அருகாமையில் உள்ள. வேறு எந்தப் பாடசாலையாகவும் இருக்கலாம். போட்டியில் கலந்து கொள்ளும் வேறு பாடசாலையின் விபரங்களை அதிபர் மூலம் பெற்றுக் கொள்ளலாம். அல்லது வாட்டலூ பல்கலைக் கழகத்தில் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெறலாம். இப்போட்டியில் மாணவர்கள் கலந்து கொள்வதால். இவர்களது கணித ஆர்வம் அதிகரிக்கும். அது மட்டுமல்லாமல். எதிர்காலத்தில் இம் மாணவர்கள் வாட்டலூ பல்கலைக்கழகத்திற்கு அனுமதிகோரி விண்ணப்பிக்கும் சந்தர்ப்பத்தில். இக்கணிதப் போட்டியின் பெறுபேறுகள் ஒரு பிரத்தியேக கவனத்தைக் கொடுக்கும் என்பதனைப் பெற்றோர் தங்கள் பிள்ளைகட்கு தெரியப்படுத்த வேண்டும். இவ்வருடம் (2002) தரம் 13 இலும். அடுத்த ஆண்டில் இருந்து தரம் 12 இலும் போட்டியிடும் மாணவர்கள் இப்பரீட்சை முடிவில் புலமைப் பரிசிலையும் பெறும் வாய்ப்புகளும் உண்டு. எனவே இக்கணிதப் போட்டி ஒரு சிறப்பான விடயம் என்பதனை இவ்விதழில் உறுதிப்படுத்துக் கொள்கிறேன்.

இப்போட்டி விடயமாக வாட்டலூ கணித பீட செயலாளர் Ms. Joanne Kuriskowski உடன் பேசினேன். இப்போட்டிவிடயமாக இந்தப் பத்திரிகையில் வெளிவரும் செய்தியினை வரவேற்று. தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார். இது தொடர்பாக வேறு எவ்வித தகவல்களுக்கும் தன்னைத் தொடர்பு கொள்ளலாம் என்றும் தெரிவித்துள்ளார். மாணவர்கள் பின்வரும் இணையத்தளத்தின் மூலமும் இது பற்றிய விடயங்களை அறியலாம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.
*www.cemc.uwaterloo.ca*

*Ms. Joanne Kursikowski*
